# TNPSC GROUP I MAIN 2021
# ADDITIONAL NOTES FOR MANDATORY TEST XIX (ECONOMICS III)

1. **Write about working women hostels functioning in Tamil Nadu.**
**தமிழ்நாட்டில் செயல்படும் பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகள் பற்றி குறிப்பிடவும்.**

- புதிய வேலை வாய்ப்புகள் அதிகரித்துள்ள நிலையில் பெண்கள் அதிக அளவில் பணி நிமித்தமாக தங்களது இல்லங்களை விட்டு வெளியிடங்களுக்குச் சென்று பணிபுரியும் நிலை ஏற்பட்டுள்ளது. இன்றைய சூழ்நிலையில் பெண்கள் உயர்கல்வி, தொழிற்சார் கல்வி உட்பட அனைத்து துறைகளிலும் மிளிர்கின்றனர்.

- நகர்ப்புறங்களில் அதிக வேலை வாய்ப்புகள் உள்ள காரணத்தால், பெண்கள் பணிபுரிய நகர்ப்புறங்களுக்கு செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. விலைவாசி உயர்வு மற்றும் வாடகை உயர்வு ஏற்பட்டதால், வாழ்வதற்கான செலவு உயர்ந்துள்ளது. ஏழை மற்றும் நடுத்தர குடும்பத்தைச் சார்ந்த பெண்கள் தங்களுக்கு கிடைக்கும் வருமானத்தில் தாங்கள் பணிபுரியும் புதிய இடங்களில் சமாளிக்க பொருளாதார ரீதியாக மிகவும் சிரமப்படுகின்றனர்.

- எனவே, பணிபுரியும் பெண்களுக்கு உதவிடும் வகையில் 28 பணிபுரியும் மகளிர் அரசு விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. மேலும் 14 பணிபுரியும் மகளிர் விடுதிகள் 2014 – 15ம் ஆண்டில் துவங்கிட நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. சென்னையில் செயல்படுத்தப்பட்டு வரும் பணிபுரியும் மகளிர் அரசு விடுதிகளில் சேர 25,000 வரையும், இதர இடங்களில் 15,000 வரையும் மாத வருமானம் ஈட்டும் பணிபுரியும் பெண்கள் பயன் பெற தகுதியுடையவராவர்.

- இங்கு அனுமதிக்கப்படும் பெண்கள் மாத வாடகையாக சென்னையில் 300மும் இதர இடங்களில் 200 மும் செலுத்த வேண்டும். உணவு கட்டணம், மின் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் போன்ற செலவினங்கள் பகிர்ந்தளித்தல் முறையில் மேற்கொள்ளப்படுகிறது. இந்த விடுதிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கான ஊதியம் அரசால் வழங்கப்படுகிறது.

2. **Bring out the importance of Tamil Nadu Third Genders Welfare Board.**
**தமிழ்நாடு மூன்றாம் பாலினத்தவர்கள் நல வாரியத்தின் முக்கியத்துவத்தினை வெளிக் கொணரவும்.**

- தமிழ்நாடு மூன்றாம பாலினத்தவர்கள் நல வாரியம் - 2008
- மூன்றாம் பாலினத்தவர், பல்வேறு இன்னல்கள் மற்றும் கொடுமைகளால் பாதிக்கப்படுவதோடு மட்டுமில்லாமல் அவர்களுக்கு பல உரிமைகளும் மறுக்கப்படுகின்றன. மூன்றாம் பாலினமாக மாறும் நிலையில் பள்ளிக்கூடத்திலிருந்து கூட வெளியேற்றப்படுகிறார்கள்.
மூன்றாம் பாலினத்தினருக்கு எதிராக உள்ள நெடுங்காலத்தைய பாகுபாட்டின் காரணமாக அவர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் பணிப்பாதுகாப்பு போன்றவை மறுக்கப்படுகின்றன.

  மேற்கண்ட சூழ்நிலை, அவர்களை தங்கள் சொந்த குடும்பத்திலிருந்து வெளியேற்ற கட்டாயப்படுத்துவதுடன் அவர்கள் கல்வியைத் தொடர முடியாமல் நாடோடியாக வாழ வேண்டிய நிலையையும் உருவாக்குகிறது. அப்படி வெளியேற்றப்படும் நிலையில் அவர்களிடம் இன்றியமையா ஆவணங்கள் குறிப்பாக பிறப்புச் சான்றிதழ், குடும்ப அட்டை, கல்விச் சான்று, சாதிச் சான்று மற்றும் வாக்காளர் அடையாள அட்டைகள் போன்றவை இருப்பதில்லை.

மூன்றாம் பாலினத்தவர்களுக்கு ஏற்படும் இது போன்ற பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவும், அவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காகவும் அசரால் மூன்றாம் பாலின நலவாரியம் உருவாக்கப்பட்டது.

- மூன்றாம் பாலினத்தவர் தங்களது வாழ்வாதாரத்திற்காக ஒழுக்கமும் மதிப்புமிக்க வகையில் தொழில் ஒன்றை அமைத்துக் கொள்வதே அவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களில் முதன்மையானதாகும்.
  மூன்றாம் பாலினத்தவர் தங்களது வாழ்வாதாரத்தை, பொருளாதார ரீதியாக உயர்த்திக் கொள்ளும் பொருட்டு வருவாய் ஈட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ள அவர்களின் சுய உதவிகுழுக்களுக்கு 25 சதவிகித மானியத்துடன் ₹15 இலட்சம் வரை வங்கிக் கடன் அளிக்கப்படுகிறது. மளிகை கடை அமைத்தல், பசுமாடுகள் வளர்த்தல், சிற்றுண்டி உணவகம் அமைத்தல், பசுமாடுகள் வளர்த்தல், சிற்றுண்டி உணவகம் அமைத்தல், சோப்பு உற்பத்தி செய்தல், அணை ஆடை உற்பத்தி செய்தல், பால் பொருட்களை உற்பத்தி செய்தல், பயணிகள் ஆட்டோ, சரக்கு ஆட்டோ ஒட்டுதல், மற்றும் துணி வியாபாரம், அரிசி வியாபாரம் போன்ற பல்வேறு பொருளாதார செயல்பாடுகளை மூன்றாம் பாலினத்தவர் சுய உதவிக் குழுக்கள் மூலம் செய்து வருகின்றனர்.

3. **Write short note on State Resource Centre for Women.**
   **பெண்களுக்கான மாநில ஆதார வள மையங்களைப் பற்றி சிறு குறிப்பு வரைக.**

- தமிழ்நாட்டில் மாநில பெண்கள் வள மையம் ஒன்று தேசிய பெண்கள் அதிகார மையத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது. மத்திய, மாநில அரசு திட்டங்கள் குறிப்பாக சிறப்புத் திட்டங்கள் குறித்து ஆராய்ந்து, தொடர்புடைய நிறுவனங்கள் கட்டமைப்புகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு தேவையான தகவல்களைச் சேகரித்து தேசிய அதிகார மையத்திற்கு வழங்க இம்மையம் அமைக்கப்பட்டுள்ளது.

- பெண்களுக்கு அனைத்து துறைகளிலும் முழுமையான அதிகார பகிர்வு அளிப்பதே மாநில பெண்கள் வள மையத்தின் (2012) முக்கிய நோக்கமாகும். பாலின விவகாரங்கள் குறித்த திட்டங்கள் மற்றும் சட்டங்களை செயல்படுத்துவதற்கு அரசு மற்றும் பிற தொடர்புடையவர்களுடன் ஒருங்கிணைந்து இம்மையம் செயல்படுகிறது.

- மாநில அதிகார குழு மற்றும் மாநில பெண்கள் வள மையம் சம்மந்தப்பட்ட விவரங்களை மத்திய அரசுடன் நேரடியாக தொடர்பு கொள்வதற்கு சமூக நலத்துறை ஆணையர் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

4. **Give a brief explanation on SABLA.**
   **சப்லா (SABLA) என்பது பற்றி சிறிது விளக்கமாக எழுதவும்?**

**ராஜீவ்காந்தி வளரிளம் பெண்கள் தன்னுரிமை மேம்பாட்டுத் திட்டம் (சப்லா):**

- வளரிளம் பெண்களின் பல்வேறு பரிமாணங்களில் உள்ள சிக்கல்களுக்கு தீர்வு காணும் நோக்கில் இத்திட்டம் (2011 – 2012-இல்) அறிமுகப்படுத்தப்பட்டது. சென்னை, கோயம்புத்தூர், கடலூர், மதுரை, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, சேலம், திருவண்ணாமலை மற்றும் கன்னியாகுமரி ஆகிய 9 மாவட்டங்களில் உள்ள 139 திட்டங்களில் முன்னோடித் திட்டமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், இணை உணவு வழங்குதல் மற்றும் இணை உணவு அல்லாத பிற பணிகள் என இரண்டு பிரிவுகளின் கீழ் நலப்பணிகள் அளிக்கப்படுகின்றன.

- அங்கன்வாடி மையங்களில் பதிவு செய்யப்பட்ட 11 முதல் 18 வயதுள்ள பள்ளி செல்லாத வளரிளம் பெண்கள் மற்றும் 15 முதல் 18 வயதுள்ள இதர அனைத்து வளரிளம் பெண்களுக்கும் இணை உணவினை வீட்டுக்கு எடுத்து சென்று பயன்படுத்தும் வகையில் வருடத்தில் 300 நாட்களுக்கு, தலா ஒரு நபருக்கு நாளொன்றுக்கு ₹ 6.50 செலவில் வழங்கப்படுகிறது. இதற்கான 50 சதவிகித நிதியினை மாநில அரசு அளிக்கிறது. இணை

உணவிற்கென 2014 – 2015-ம் வருடத்திற்கு 76.00 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டு, இத்திட்டத்தின் மூலம் 4.04 லட்சம் வளரிளம் பெண்கள் பயனடைந்துள்ளனர்.

- வளரிளம் பெண்களுக்கான இணை உணவு அல்லாத பிற பணிகளின் கீழ், இரும்புச்சத்து மற்றும் போலிக் அமில மாத்திரை வழங்குதல், வாழ்க்கைத் திறன் கல்வி, ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக்கல்வி அளித்தல், ஆலோசனை வழங்குதல், உடல் பரிசோதனை செய்தல், தொழிற்பயிற்சி அளித்தல் போன்ற நலப்பணிகள் அளிக்கப்படுகின்றன.

- இத்திட்டத்தின் கீழ் 16 கீழ் 18 வயதுள்ள வளரிளம் பெண்களுக்கு அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் மூலமாகவும், பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிலையங்கள் மூலமாகவும், அலகுக்கலைப் பயிற்சி, கணினி பயிற்சி, தையற்பயிற்சி, வீட்டு உபயோகப்பொருட்கள் பழுதுநீக்கும் பயிற்சி, அடிப்படை மின்சாரப் பணிகள் பயிற்சி, கைவினைப் பொருட்கள் செய்யும் பயிற்சி என பல பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

- இப்பயிற்சிகளின் மூலம் வளரிளம் பெண்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதால் அவர்களின் பொருளாதார நிலை மேம்பாடு அடைகிறது. இத்திட்டத்தின் கீழ் 2014 – 2015 ஆம் ஆண்டில் ஒரு திட்டத்திற்கு ₹ 1.87 இலட்சம் வீதம் இதுவரை மொத்தம் ₹ 2.61 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

5. **What is meant by Mobile Anganwadi Services?**
**நடமாடும் அங்கன்வாடி சேவைகள் என்றால் என்ன?**

பரவலாக்கப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட கொள்கையின் அடிப்படையில், எந்த ஒரு தகுதி வாய்ந்த பயனாளியும் விடுபடக்கூடாது என்பதை உறுதி செய்யும் பொருட்டு தங்களது வருமானத்தினைத் தேடித் கொள்ளவும்.

வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தி கொள்ளவும் பிற மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்து அல்லது தமிழ்நாட்டிலேயே ஒரு மாவட்டத்திலிருந்து மற்ற மாவட்டங்களுக்கு புலம் பெயர்ந்து, கட்டடங்கள், கட்டுமான பகுதி, செங்கல்சூளை ஆகிய இடங்களுக்கு புலம் பெயர்ந்து வாழும் ஏழைக் குடும்பங்களில் உள்ள குழந்தைகள், வளரிளம் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள் / பாலூட்டும் தாய்மார்கள் தமிழ்நாட்டில் வாழும் போது ஊட்டச்சத்துக் குறைபாடுடன் இருத்தல் கூடாது என்ற எண்ணத்துடன், சுகாதாரம், கல்வி மற்றும் தொழிலாளர் நலம் ஆகிய துறைகளுடன் இணைந்து ஒரு மாவட்டத்திற்கு இரண்டு ஊர்திகள் மூலம் சென்னை, காஞ்சிபுரம், கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் திருவள்ளூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் முதற்கட்டமாக நடமாடும் அங்கன்வாடி சேவைகள் ₹ 40.85 இலட்சம் செலவில் 2014 – 2015 ஆம் ஆண்டில் புலம் பெயர்ந்து வாழும் குடும்பங்கள் (Migrant Labourers) பயன்பெறும் வகையில் அளிக்கப்படுகின்றன

6. **State the objectives of Tamil Nadu Narikoravar Welfare Board.**
**தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியத்தின் நோக்கங்களைக் குறிப்பிடவும்.**

**<u>தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்</u>**

நரிக்குறவர்களுக்கு கல்வி, மாற்றுத் தொழில் புரிவதற்கான உதவி மற்றும் அவர்களுக்கு பல்வேறு நல உதவிகள் வழங்குவதற்காகவும், இத்திட்டங்களின் செயலாக்கத்தைக் கண்காணித்து நரிக்குறவர்களின் மேம்பாட்டினை உறுதி செய்யவும் ‘‘தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்’’ இயங்கி வருகிறது.

அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவரும் நல வாரியங்கள் மூலம் வழங்கப்பட்டு வரும் நல உதவித்திட்டங்கள் போன்று நரிக்குறவர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு ''விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம்'' ஆகிய நலத்திட்டங்களின் கீழ் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

நரிக்குறவர்கள் தனியாகவோ, கூட்டாகவோ சுயதொழில் தொடங்கி தங்கள் பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் தனிநபர் தொழில் துவங்குவதற்காக ரூ.**7,500** மானியமாகவும், கூட்டாகத் தொழில் தொடங்குவதற்கு அதிகபட்ச மானியமாக ரூ.**1,25,000** பின்நிகழ்வாக(Back ended subsidy) வழங்கப்படுகிறது.

7. **Write a short note on Pudhu Vaazhvu Project in Tamil Nadu.**
**தமிழ்நாட்டின் புது வாழ்வுத் திட்டம் பற்றி சிறு குறிப்பு வரைக.**

**புதுவாழ்வு திட்டம்:**

- ''தமிழ்நாடு அனைத்து தரப்பு மக்களின் தேவைகளை உள்ளடக்கிய உயரிய வளர்ச்சியை வெளிப்படுத்தும் - மிகவும் பின்தங்கிய, நலிவுற்றோர் மற்றும் ஆதரவற்றோர் நலனில் அக்கறை கொண்டு சமமான வாய்ப்புகளும், வசதிகளும் பெற்று, வேண்டுவோருக்கு வேலை கிடைக்கச் செய்து, வறுமை முற்றிலும் அகன்று தமிழ்நாடு முதன்மையான மாநிலமாக உருவாகும்''.
- புதுவாழ்வு திட்டம் நவம்பர் 15 ஆம் 2005ம் ஆண்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் துவக்கப்பட்டது. ஏழ்மையை களைவதற்கான முன்னோடித் திட்டமான இது உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.
- ஏழை, எளிய மக்களை உள்ளடக்கிய மக்கள் அமைப்புகளைத் தோற்றுவித்து, வங்கிகளின் மூலம் அவர்களுக்கு தேவைப்படும் நிதி ஆதாரத்தைப் பெற்றுத்தந்து, வாழ்வாதாரத்தையும் ஆற்றலையும் மேம்படுத்தி, மீண்டும் இவர்கள் ஏழ்மை நிலைக்கு உள்ளாவதை தவிர்க்கும் பொருட்டு, பிற சமூக பாதுகாப்பு திட்டங்களில் இருந்து உரிய உரிமைகள் மற்றும் பலன்களை அடைய செய்யும் பல்முனை வறுமை போக்கும் அணுகுமுறையை இத்திட்டம் பின்பற்றி வருகிறது.
- இத்திட்டத்தின் கீழ் வறுமை ஒழிப்பு செயல்பாடுகள் அனைத்தும் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள், சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், ஒத்தத் தொழில் குழுக்கள் / கூட்டமைப்புகள் மற்றும் மக்கள் கற்றல் மையங்கள் போன்ற மக்கள் அமைப்புகள் வாயிலாகவே செயல்படுத்தப்படுகின்றன.

8. **Write a note on Mahalir Thittam.**
**மகளிர் திட்டம் பற்றி ஒரு குறிப்பு வரைக.**

**மகளிர்திட்டம்:**

- தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், 1991- 92 ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் (IFAD) நிதியுதவியுடன் வேளாண்மை சார்ந்த தொழில்களில் ஈடுபட்டிருந்த மகளிரிடையே சுய உதவிக் குழுக்களை அமைத்து, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்தியது. இத்திட்டம் சேலம், தென்னாற்காடு (கடலூர் மற்றும் விழுப்புரம்) மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு 1994 ஆம் ஆண்டு வரை படிப்படியாக விரிவு படுத்தப்பட்டது. மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் இந்த வெற்றியினை அடிப்படையாகக் கொண்டு மாநில அரசு மகளிர் திட்டம் என்ற திட்டத்தினை மாநில அரசின் நிதியுதவியுடன் அனைத்து மாவட்டங்களிலும் துவக்கியது. அதன் பிறகு, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், மாநிலத்தின் மகளிர் வளர்ச்சிக்காக சுய உதவிக் குழு இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் முக்கிய நிறுவனமாகத் திகழ்கிறது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், மகளிரைக்

கொண்டு சுய உதவிக் குழுக்களை உருவாக்கி, அவர்களின் திறன்களை மேம்படுத்தி, கூட்டமைப்புகள் மூலம் ஒருங்கிணைத்து, வருமானம் ஈட்டும் தொழில் தொடங்க வங்கிக் கடன் இணைப்புகளை ஏற்படுத்தி அவர்களை சமூக மற்றும் பொருளாதார மேம்பாடு அடையச் செய்ய ஆற்றல்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

9. **Bring out the significance of SHG.**
**சுய உதவிக் குழுக்களின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடவும்.**

**சுயஉதவிக் குழுக்கள்:**

- ஒரே பகுதியில் வசிக்கும் 18 முதல் 60 வயதுக்கு உட்பட்ட, 12 முதல் 20 ஏழை மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. குழுக்களின் முடிவிற்கேற்ப உறுப்பினர்களிடையே சேமிப்பு மற்றும் தங்களுக்குள்ளேயே கடன் வழங்குதலை ஊக்கப்படுத்துவதே சுய உதவிக் குழுக்களின் முக்கிய நோக்கமாகும்.

**சுய உதவிக் குழுக்களின் முக்கிய அம்சங்கள்:**

- குறிப்பிட்ட கால இடைவெளியில் கூட்டங்கள், தவறாத வருகை, முறையான பயிற்சி, தொடர் சேமிப்பு, உள்கடன், தவணை தவறாமல் திருப்பிச் செலுத்துதல் மற்றும் கணக்குப் பதிவேடுகள் பராமரிப்பு ஆகியவை சிறப்பு அம்சங்களாகும்.
- சுய உதவிக்குழு இயக்கமானது ஏழை மகளிரை கந்து வட்டிகாரர்களின் பிடியிலிருந்து விடுபட உதவுகிறது.
- ஒவ்வொரு குழுவிலும் அவர்களால் தேர்வு செய்யப்பட்ட ஒரு ஊக்குநர் மற்றும் இரண்டு பிரதிநிதிகள் உள்ளனர்
- ஊக்குநர், குழுவிற்கு தலைமை ஏற்று வழி நடத்துவதற்கு பொறுப்பாவார்.
- பிரதிநிதிகள், ஊக்குநருக்கு உதவுவதுடன் குழுவின் கணக்குப் பதிவேடுகளை பராமரிப்பர்.

10. **Describe the functions of Tamil Nadu Housing Board.**
**தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பணிகளை விவரிக்கவும்.**

**தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்**

சென்னை நகரின் வீட்டுவசதித் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக 1947 ஆம் ஆண்டு **நகர அபிவிருத்திக் குழுமம்** துவங்கப்பட்டது. பிறகு, மாநிலத்தின் வீட்டு வசதித் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக அது 1961-ல் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமாக மாற்றி அமைக்கப்பட்டது. **“அனைவருக்கும் வீட்டு வசதி”** என்பதே வீட்டுவசதி வாரியத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் அனைத்து உள்கட்டமைப்ப வசதிகளுடன் அனைத்து தரப்பு மக்களும் வாங்கத்தக்க வகையில், தவணை முறையில் வீட்டு வசதி அலகுகளை வழங்கி இலட்சக்கணக்கான மக்களின் சொந்த வீடு/மனை என்ற கனவை நனவாக்குவதில் முன்னோடி நிறுவனமாகத் திகழ்வதில் பெருமையடைகிறது. தமிழ்நாடு வீட்டுவசதி தரமான சூழலுக்கு ஏற்ற, அதிக அளவிலான புறநகர் திட்டங்களைச் செயல்படுத்துவதில் முன்னோடியாக உள்ளது.

வாரியத்தின் பல புறநகர் திட்டங்கள்/மாபெரும் நகரயங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், சென்னை மற்றும் இதர நகரங்களில், அதிக எண்ணிக்கையிலான மனைகளை வாங்கதக்க விலையில் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர் மற்றும் குறைந்த வருவாய்ப்பிரிவினருக்கு அளிக்கும் நோக்கத்தோடு, பல தன்னிறைவு வீட்டமனைத் திட்டங்களைத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் உருவாக்கியுள்ளது.

மேலும், தமிழ்நாடு விரைவாக நகரமயம் ஆவதற்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் முக்கியப் பங்காற்றியுள்ளது. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், மக்களுக்கு 50 ஆண்டுகளாக சேவை செய்து கடந்த 2011-ல் பொன்விழா ஆண்டை நிறைவு செய்தது.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறையின் நிர்வாகக்கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகிறது. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் அரசால் நியமிக்கப்பட்ட தலைவர் அவர்களின் தலைமையில், மேலாண்மை இயக்குநர் செயலர் மற்றும் பணியாளர் அலுவலர், நிதி ஆலோசகர், தலைமை வருவாய் அலுவலர்/மாவட்ட வருவாய் அலுவலர்கள் ஆகியோரின் துணையுடன் செயல்படுகிறது.

வாரியத்தின் தொழில் நுட்பப்பிரிவுகள் தலைமைப் பொறியாளர்களின் தலைமையில் அவர்களுக்கு உதவியாக மேற்பார்வைப் பொறியாளர்கள் மற்றும் செயற்பொறியாளர்களைக் கொண்டு செயல்படுகிறது.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைமை அலுவலகம் சென்னை நந்னத்திலும், மாநிலம் முழுவதும் 6 சரகங்கள் மற்றும் 26 கோட்டங்களுடன் முறையே மேற்பார்வைப் பொறியாளர்கள் மற்றும் செயற்பொறியாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகிறது.

11. **Describe the objectives of TAHDCO and schemes implemented through TAHDCO.**

**தாட்கோவின் (TAHDCO) நோக்கங்களைப் பற்றியும், தாட்கோ வாயிலாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றியும் விளக்குக.**

**தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்**

**முன்னுரை**

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ), 1974 ஆம் ஆண்டு ஆதி திராவிடர்களுக்கு தீப்பிடிக்காத வீடுகள் கட்டுவதற்காக இந்திய நிறுவனச் சட்டம், 1956 இன் கீழ் நிறுவப்பட்டது. 1980-81 ஆம் ஆண்டிலிருந்து ஆதிதிராவிடர்களின் சமூக பொருளாதார வளர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்களும் இந்நிறுவனத்தின் மூலமே செயல்படுத்தப்படுகின்றன.

**நோக்கம்**

1. கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுதல்
2. பொருளாதார மேம்பாட்டு திட்டங்களைச் செயல்படுத்துதல்
3. திறன் வளர்க்கும் பயிற்சி அளித்தல்; போட்டித் தேர்வுகள் மற்றும் உயர்கல்வி தேர்வுகளுக்குப் பயிற்சி அளித்தல்
4. சமூக ஏணியில் அடித்தட்டில் மிக வறிய நிலையில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரது பொருளாதார நிலையினை மேம்படுத்துவதற்கு அரசு பல சீரிய முயற்சிகள் மேற்கொண்டாலும், ஆதிதிராவிட மக்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கும் அவர்களது வாழ்க்கைத் தரத்திற்குமிடையே உள்ள இடைவெளியானது மிகுந்தே காணப்படுகிறது. இவ்விடை வெளியினைக் குறைக்க பல்வேறு சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இதன் ஓர் அங்கமாய் ஆதிதிராவிடர் மக்கள், பல்வேறு பொருளாதார திட்டங்களின் கீழான, 2011-12, ஆம் ஆண்டு வரை தனி நபருக்கு வழங்கிவந்த மானியத் தொகை ரூ.25,000/-ஐ ரூ.2.25 இலட்சமாக உயர்த்தியுள்ளது. இந்த மானியத் தொகை உயர்வானது ஆதி திராவிடர் மக்களின் சமூக பொருளாதார வாழ்க்கைத் தரத்தில் நிரந்தர மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது.

**ஆதி திராவிட மக்களுக்காக தாட்கோவினால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

1. நிலம் வாங்கும் திட்டம் (மகளிருக்கு மட்டும்)
2. நிலம் மேம்பாட்டுத் திட்டம்
3. தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

4. தொழில் முனைவோர் சிறப்புத் திட்டம் - பெட்ரோல், டீசல், மற்றும் எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் அமைப்பதற்கான சிறப்புத் திட்டம்
5. இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டம்
6. இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டத்தில் மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த தொழில்களுக்கான நிதியுதவித் திட்டம்
7. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்காகச் சுழல் நிதி
8. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கானப் பொருளாதார கடன் உதவித் திட்டம்
9. இந்திய குடிமைப் பணி முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதி உதவி
10. தமிழ்நாடு தேர்வாணையம் தொகுதி-1 முதன்மைத் தேர்வு எழுதுவதற்கு நிதி உதவி
11. இளம் சட்டப் பட்டதாரிகளுக்குச் சுயமாகத் தொழில் செய்வதற்காக நிதி உதவி
12. பட்டயக் கணக்குகள்/செலவுக் கணக்கர்கள் சுயமாக தொழில் புரிய நிதி உதவி
13. மேலாண்மை இயக்குநர் விருப்புரிமை நிதி
14. மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை நிதி

12. **Evaluate the activities of Tamil Nadu Corporation for Development of Women.**
**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் செயல்பாடுகளை மதிப்பிடவும்.**

### தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

**தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்:**

- ‘‘ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமமாக உயர வேண்டுமானால், அவர்கள் பொருளாதார ரீதியில் அதிகாரம் பெற்று தமது சொந்தக் கால்களில் நிற்கும் வலிமையையும் தன்னம்பிக்கையும் பெறவேண்டும்’’.

- தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் 1983ஆம் ஆண்டு, பெண்கள் சமூக மற்றும் பொருளாதார அதிகாரம் பெற வேண்டுமென்ற நோக்கத்துடன் தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் இரண்டு பெருந்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

- **மகளிர்திட்டம்:** மாநில அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்

- **மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்:** மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன் 75 : 25 என்ற விகிதத்தில் செயல்படுத்தப்படும் திட்டம்.

**மகளிர்திட்டம்:**

- தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், 1991- 92 ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் (IFAD) நிதியுதவியுடன் வேளாண்மை சார்ந்த தொழில்களில் ஈடுபட்டிருந்த மகளிரிடையே சுய உதவிக் குழுக்களை அமைத்து, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்தியது. இத்திட்டம் சேலம், தென்னாற்காடு (கடலூர் மற்றும் விழுப்புரம்) மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு 1994 ஆம் ஆண்டு வரை படிப்படியாக விரிவு படுத்தப்பட்டது. மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் இந்த வெற்றியினை அடிப்படையாகக் கொண்டு மாநில அரசு மகளிர் திட்டம் என்ற திட்டத்தினை மாநில அரசின் நிதியுதவியுடன் அனைத்து மாவட்டங்களிலும் துவக்கியது. அதன் பிறகு, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், மாநிலத்தின் மகளிர் வளர்ச்சிக்காக சுய உதவிக் குழு இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் முக்கிய நிறுவனமாகத் திகழ்கிறது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், மகளிரைக் கொண்டு சுய உதவிக் குழுக்களை உருவாக்கி, அவர்களின் திறன்களை மேம்படுத்தி, கூட்டமைப்புகள் மூலம் ஒருங்கிணைத்து, வருமானம் ஈட்டும் தொழில் தொடங்க வங்கிக் கடன் இணைப்புகளை ஏற்படுத்தி அவர்களை சமூக மற்றும் பொருளாதார மேம்பாடு அடையச் செய்ய ஆற்றல்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**சுயஉதவிக் குழுக்கள்:**

- ஒரே பகுதியில் வசிக்கும் 18 முதல் 60 வயதுக்கு உட்பட்ட, 12 முதல் 20 ஏழை மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. குழுக்களின் முடிவிற்கேற்ப உறுப்பினர்களிடையே சேமிப்பு மற்றும் தங்களுக்குள்ளேயே கடன் வழங்குதலை ஊக்கப்படுத்துவதே சுய உதவிக் குழுக்களின் முக்கிய நோக்கமாகும்.

**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்:**

- தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் என்ற சிறப்புத் திட்டத்தினை தமிழ்நாடு அரசு 2012 -13 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. ஊரக பகுதிகளில் உள்ள வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை மக்களுக்கான நீடித்த தன்மையுடைய வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குவதற்கு இத்திட்டத்தின் மூலம் வழி வகை செய்யப்படுகிறது.

- ஊரக ஏழை மக்களுக்கான வலுவான மற்றும் துடிப்பான அமைப்புகளை உருவாக்கி வாழ்வாதாரத்தை உயர்த்தி, நிதி மற்றும் பல்வேறு சேவைகளை முறையாகப் பெற வழிவகை செய்து குடும்ப வருமானத்தை பெருக்குவதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும். இந்த திட்டத்தின் செயல்பாடுகளுக்கான நிதி, மத்திய மற்றும் மாநில அரசுகளால் 75 : 25 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது.

**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முக்கிய அம்சங்கள்:**

- ○ விடுபட்ட ஏழை மக்களை கண்டறிந்து அவர்களை சுய உதவிக் குழுவில் ஒருங்கிணைத்தல்.
- ○ ஊரக ஏழைகளைக் கொண்ட சமுதாய நிறுவனங்களை உருவாக்கி வலுப்படுத்துதல்.
- ○ திறன் வளர்ப்புப் பயிற்சிகளின் மூலம் ஊரக ஏழை மக்களை சமூக மேம்பாடு அடையச் செய்தல்.
- ○ நலிவுற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட ஏழைகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல்.
- ○ சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் தரத்தினை மேம்படுத்தி அவற்றைச் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல்.
- ○ சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பொருளாதார நடவடிக்கை மேற்கொள்ள அவர்களுக்கு கடன் வழங்கும் பொருட்டு குழுக்களுக்கு நிதியுதவி வழங்குதல்.
- ○ ஊரக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி அளித்தல்.
- ○ அரசுத் துறைகள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, நிதி மற்றும் நிதி சாரா சேவைகளை முறையாகப் பெற்று திறம்பட பயன்படுத்திட வழி வகை செய்தல்.
- ○ கிராமப்புற ஏழை மக்களை அவர்களின் அடிப்படை உரிமைகளைப் பெற தயார் செய்து அவர்களது சுகாதாரம் மற்றும் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கச் செய்தல்.

13. **Elucidate the Chief Minister's Uzhavar Pathukappu Thittam.**
**முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தைப் பற்றி விளக்கமாக எடுத்துரைக்கவும்.**

**முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் 2011:**

- 'முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்' 10.9.2011 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**தகுதிகள்:**

**விவசாய உறுப்பினர்கள்:**

- விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ள 18 வயது முதல் 65 வயது வரை உள்ள தொழிலாளர்கள், 2.50 ஏக்கருக்கு 'மேற்படாத நன்செய் நிலத்தை அல்லது 5.00 ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலத்தை சொந்தமாக வைத்திருந்து அந்த நிலத்தில் நேரடியாக பயிர் செய்யும் 18 வயது முதல் 65 வயது வரை உள்ள அனைத்து குறு.்.சிறு விவசாயிகள், பயிரிட குத்தகைதாரர்கள் இத்திட்டத்தின்கீழ் உறுப்பினர்களாக பதிவு செய்ய தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

- விவசாயத் தொழில் என்பது, விவசாயம், விவசாயம் சார்ந்த தொழில்களான தோட்டக்கலை, பட்டுப்புழு வளர்த்தல், கால்நடை வளர்த்தல் மற்றும் பால்பண்ணை தொழில், தீவன பயிர் செய்தல், மேய்ச்சல், நாற்று வளர்த்தல், கோழிப்பண்ணை, மரங்கள் வளர்த்தல் மற்றும் உள்ளூர் மீன்பிடித்தல் ஆகும்.

**சார்ந்து வாழும் உறுப்பினர்கள்:**

- உறுப்பினர்களைச் சார்ந்து வாழும் பொருள் ஈட்டாத குடும்ப உறுப்பினர்களும் இத்திட்டத்தின் கீழ் உறுப்பினராகப் பதிவு செய்ய தகுதியானவர்கள், அவர்கள் உறுப்பினரின்,
  1. மனைவி அல்லது கணவன் (நேர்விற்கேற்ப)
  2. குழந்தைகள்
  3. இறந்துவிட்ட மகனுடைய மனைவி (விதவை மருமகள்) மற்றும் குழந்தைகள் மற்றும்
  4. பெற்றோர்

**உறுப்பினர்களைக் கணக்கெடுத்தல்:**

- பயனாளிகள் இத்திட்டத்தின் பயன்களைத் தொடர்ந்து பெறும்பொருட்டு 72,40,387 குடும்ப அடையாள வில்லைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் முழுமையான கணக்கெடுப்பு எடுக்கப்பட்டு அவைகள் வருவாய் கிராம அளவில் கணக்கெடுப்பு பதிவேடுகளில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், கணினியிலும் விவரங்கள் பதிவு மேற்கொள்ளப்பட்டது. இன்றைய நிலையில் (31.07.2015), உறுப்பினர்கள் கீழ்க்கண்டவாறு கணக்கெடுக்கப்பட்டுள்ளனர்.

- இத்திட்டத்தின் கீழ் திருமணம், புதிய விவசாய / சார்ந்த உறுப்பினர், இறப்பு போன்ற காரணங்களுக்காக உறுப்பினர்கள் சேர்த்தல் மற்றும் நீக்குதல் தகுதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

**நிதி உதவி:**

- இத்திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட நல உதவிகள் உறுப்பினர்களுக்கும் மற்றும் உறுப்பினர்களைச் சார்ந்தவர்களுக்கும் வழங்கப்படுகின்றன.

**உறுப்பினர்களுக்காக:**

- திருமண உதவித்தொகை
- முதியோர் ஓய்வூதியம்
- உறுப்பினர்களின் தற்காலிக உடல் திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவி
- விபத்து நிவாரணம்
- இயற்கை மரண உதவித்தொகை
- ஈமச் சடங்கு செலவு

**சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்காக**

- கல்வி உதவித்தொகை
- திருமண உதவித்தொகை
- எச்.ஐ.வி-யினால் உயிரிழந்த உறுப்பினரின் அனாதை குழந்தைகளுக்கான உதவித் தொகை
- ஈமச்சடங்கு செலவு
- விவசாய உறுப்பினரின் இறப்புக்கும் பின்னரும் அவரைச் சார்ந்த குடும்ப உறுப்பினர்கள் அவர்களுக்கான உதவித் தொகையினை தொடர்ந்து பெறலாம்.
- இத்திட்டத்தின்கீழ் அனைத்து உதவித் தொகைகளும் தனி வட்டாட்சியர்கள் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) மூலமாக மாவட்ட ஆட்சியர்களின் மேற்பார்வையில் பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன.
- இத்திட்டத்தின் கீழான உதவித் தொகையின் சிறப்பு அம்சங்கள்:

**உறுப்பினர்களுக்காக:**

**திருமண உதவி:**

- விவசாய உறுப்பினரின் சட்டப்படியான திருமணத்திற்கு ஆண்களுக்கு ரூ. 8,000-மும் பெண்களுக்கு ரூ.10,000-மும் வழங்கப்பட்டது. இத்திட்டத்தில் மட்டுமே ஆண்களுக்கு திருமண உதவி வழங்கப்படுகிறது. முந்தைய தமிழ்நாடு விவசாய தொழிலாளர்கள் விவசாயிகள் (சமூக பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம் 2006 திட்டத்தில் ஆண்களுக்கு ரூ.3,000 மும் பெண்களுக்கு ரூ 5,000-ம் மட்டுமே வழங்கப்பட்டது. 10.9.2011 முதல் 31.07.2015 வரை 19,183 பயனாளிகளுக்கு ரூ. 16,07 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**முதியோர் ஓய்வூதியம்:**

- முதியோர் ஓய்வூதியம் மாதம் ரூ.1,000-வருவாய் நிர்வாகத்துறை மூலம் வழங்கப்படுகிறது.

**உறுப்பினர்களின் தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவிதொகை:**

- உறுப்பினர்கள் நோய்களால் / கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள காலங்களில் உறுப்பினர்கள் விவசாய தொழிலுக்கு செல்ல இயலாது. இந்த தற்காலிக உடலி திறனற்ற காலத்தில் வருமானம் இல்லாமல் உறுப்பினரின் குடும்பம் கஷ்டத்திற்கு உள்ளாகும். எனவே, மேற்படி குடும்பத்திற்கு பாதுகாப்பு வழங்கும் வகையில், விவசாய உறுப்பினர்கள், காசநோய், எச்.ஐ.வி.ஃ.எய்ட்ஸ், சிறுநீரக நோய், இடைச்சவ்வூடு மூலம் பிரித்தல் (Dialysis) புற்றுநோய், கை கால் முறிவு மற்றும் நிலைகுலைவு, முதுகு தண்டுவடம் பாதிப்பு, நரம்பு சம்பந்தமான நோய், இதயம் சம்பந்தமான பிரச்சனைகள், பார்வை இழத்தல், கல்லீரல் பாதிப்பு, சிறுநீரக பாதிப்பு, மனநிலைபாதிப்பு போன்றவைகளால் பாதிக்கப்பட்டுள்ள தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கு மாதாந்திர உதவித்தொகை ரூ. 1,000 வழங்கப்படுகிறது. இந்த புதிய திட்டம் 2012 – 13 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு ஆண்டுதோறும் விரிவாக்கப்படுகிறது. 2012 – 13 முதல் 31.7.2015 வரை 81,265 பயனாளிகளுக்கு ரூ. 44.42 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**விபத்து நிவாரணம்:**

- உறுப்பினர் விபத்தில் உயிரிழந்தால், உயிரிழந்த உறுப்பினரின் குடும்பத்திற்கு நிதி உதவி மூலம் துயர்துடைக்கும் வகையில். ரூ. 1,00,000- வழங்கப்படுகிறது. இந்த உதவித்தொகை உயிரிழந்த உறுப்பினரின் குடும்பத்திற்கு ஒரு சிறந்த உதவியாக உள்ளது. மேலும், விபத்து காயங்களுக்கு கீழ்க்கண்டவாறு உதவிகள் வழங்கப்படுகின்றன.

- 10.9.2011 முதல் 31.07.205 வரை 13,629 பயனாளிகளுக்கு ரூ. 132.58 கோடி விபத்து நிவாரணமாக (ஈமச்சடங்கு உதவி ரூ.2,500-உட்பட) வழங்கப்பட்டுள்ளது.

**இயற்கை மரணத்திற்கான உதவி:**

- விவசாய உறுப்பினர் இயற்கை மரணமடைந்தால், இறந்த விவசாய உறுப்பினரின் குடும்பத்திற்கு நிவாரணம் அளிக்கும் வகையில் ரூ. 10,000- வழங்கப்படுகிறது. 10.9.2011 முதல் 31.7.2015 வரை 2,08,864 பயனாளிகளுக்கு ரூ. 259.54 கோடி (ரூ. 2,500- ஈமச்சடங்கு செலவு தொகை உட்பட) வழங்கப்பட்டுள்ளது.

**ஈமச்சடங்கு செலவு:**

- விவசாய உறுப்பினர் இறந்து விட்டால், உயிரிழந்த உறுப்பினரின் குடும்பத்திற்கு ஈமச்சடங்கு செலவுக்காக ரூ. 2,500- வழங்கப்படுகிறது.

14. **Write an essay on ICPS in Tamil Nadu.**
**தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் (ICPS) பற்றி எழுதுக.**

**ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்புத் திட்டம்:**

- நாட்டிலுள்ள குழந்தைகளின் ஒட்டு மொத்த வளர்ச்சி மற்றும் பாதுகாப்பான சூழல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இந்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் அமைச்சகம் ஒருங்கிணைந்த குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. தமிழ்நாட்டில், இத்திட்டத்தை சமூக பாதுகாப்புத் துறை இயக்குநரகமும், சமூக நலத்துறை இயக்குநரகமும் நடைமுறைப்படுத்தி கண்காணித்து வருகின்றன.

**குறிக்கோள்கள்:**

- இத்திட்டம் இளைஞர் நீதிச் சட்டத்திசை செம்மையாகச் செயல்படுத்துவதையும், துயருறும் சூழலில் உள்ள குழந்தைகளின் நலனுக்குப் பங்களித்தலையும் சமுதாயத்தில் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்தல் ஆகியவற்றோடல்லாமல், குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமை, புறக்கணித்தல், சுரண்டல், கைவிடப்படுதல் மற்றும் பெற்றோர்களிடமிருந்து பிரிதல், போன்றவற்றை ஏற்பத்தக் கூடிய துன்பச் சூழல்களைத் திறம்பட குறைத்து, குழந்தைகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேற்கூறிய நோக்கத்தை அடைய கீழ்க்காணும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.
    - குழந்தைகள் பாதுகாப்புச் சேவைகளின் தரம் மற்றும் பயன்பாட்டினை மேம்படுத்துதல்
    - இந்தியாவில் தற்போது நிலவும் குழந்தை உரிமைகள் மற்றும் குழந்தைப் பாதுகாப்புக் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
    - குழந்தைகள் பாதுகாப்பிற்கான கடமையையும், பொறுப்பபுணர்வையும் ஏற்படுத்துதல்
    - குழந்தைகள் பாதுகாப்பு குறித்த தகவல் மேலாண்மைத்திட்டம் காணாமல் போன குழந்தைகளைக் கண்டுபிடிக்கும் திட்டம் மற்றும் குழந்தைப் பாதுகாப்புச் சேவை கண்காணிப்பு ஆகியவற்றை உருவாக்குதல்
    - அனைத்து பிரிவுகளுக்கிடையே எல்லா அளவிலும் தகுந்த செயல்பாட்டை உறுதிப்படுத்துதல்

**ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் செயல்படும் அமைப்புகள்:**

- ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்த, கீழ்காணும் நிறுவன கட்டமைப்புகளை அரசு உருவாக்கியுள்ளது:
    1. மாநில திட்ட செயலாக்க அலகு
    2. மாநில குழந்தைப் பாதுகாப்புச் சங்கம்
    3. மாவட்ட குழந்தைப் பாதுகாப்புச் சங்கங்கள் / அலகுகள்
    4. மாநில தத்தெடுப்பு வள முகமை
    5. சிறப்புத் தத்தெடுப்பு முகமைகள்
    6. இளஞ்சிறார்களுக்கான சிறப்புக் காவல் பிரிவு

- அரசு மற்றும் தன்னார்வு தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள், சைல்ட் லைன் திட்டம், குழந்தைகள் நலக் குழுக்கள் மற்றும் இளைஞர் நலக் குழுமங்கள் போன்றவற்றால் வழங்கப்படும் அனைத்து சேவைகளையும் ஒருங்கிணைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- இத்திட்டத்தின் மூலம் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் குழந்தைகள் ஆகியோர் நேரடியாக பயனடைகிறார்கள். ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் சமூகத்திலுள்ள அனைத்து குழந்தைகளும் பயிற்சி, விழிப்புணர்வு போன்ற பயன்களைப் பெறுகிறார்கள்.

**அனைத்துக் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களையும் இளைஞர் நீதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்தல்:**

- தமிழ்நாட்டில் செயல்படும் அனைத்துத் தனியார் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களையும் கண்காணித்து முறைகேடுகளைத் தவிர்க்கவும், சட்டவிரோத செயல்பாடுகளைத் தடுக்கவும், சிறார்களைப் பாதுகாக்கவும் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2000, பிரிவு 34(3) இன் கீழ் அனைத்துக் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களையும் பதிவு செய்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

- இந்நிறுவனங்கள் இளைஞர் நீதிச் சட்டம் மற்றும் விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள ஆவணங்களுடன் தங்களது பதிவு விண்ணப்பத்தினை தொடர்புடை மாவட்ட சமூக நல அலுவலர் / நன்னடத்தை அலுவலரிடம் அளிக்க வேண்டும்.

- குழந்தை இல்லங்களை 2000 ஆம் ஆண்டு இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் பதிவு செய்வதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னிலை வகிக்கின்றது.

**குழந்தைகளின் பின்தொடர் முறைமை:**

- குழந்தைகள் வீட்டைவிட்டு வெளியேறுதல், காணாமல் போதல், மற்றவர்களால் கடத்தப்படுதல் போன்ற செயல்கள் உலகின் அனைத்து பகுதிகளிலும் தினந்தோறும் நடைபெறுகின்றன. இக்குழந்தைகள் பிச்சை எடுத்தல், சர்க்கஸ் போன்ற தொழில்களில் ஈடுபடுத்துதல், உடல் உறுப்பு வணிகத்திற்கு பாலியாக்கல், பலவந்தமாக பாலியல் தொழிலில் ஈடுபடுத்துதல் போன்ற செயல்களில் ஈடுபடுத்தப்படுகின்றனர். சில நிகழ்வுகளில் காணாமல் போன குழந்தைகள் தங்களது இருப்பிட முகவரியைத் தெரிவிக்க மறுப்பதாலோ அல்லது தன்னைப் பற்றிய விவரங்களை மற்றவர்களுக்கு எடுத்துக் கூற இயலாமல் இருப்பதினாலோ, அவர்களை அவர்களின் குடும்பத்தாருடன் மீண்டும் சேர்த்து வைக்க இயலாமல் உள்ளது. இளைஞர் நீதி முறைமையின் பங்காளர்களுக்கிடையே நிலவும் தகவல் பரிமாற்றமின்மை, காணாமல் போன குழந்தைகளைக் கண்டுபிடிப்பதில் முதன்மைத் தடையாக உள்ளது.

- மத்திய அரசு, 'காணாமல் போன குழந்தைகளின் பின் தொடர் முறைமை' என்ற தேசிய தகவல் முனையத்தை ஏற்படுத்தி உள்ளது. தேசிய இணையத்தின் மூலம் காணாமல் போன குழந்தைகளைக் கண்டறியவும், நிறுவனங்களிலுள்ள குழந்தைகளின் வளர்ச்சியை கண்காணிக்கவும் நேரலை தகவல் தொகுப்பு பயன்படுகிறது. தமிழ்நாட்டில் 'குழந்தை பின்தொடர் முறைமை' சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கணினி இணைப்பின் மூலம் மாநிலத்தின் உள்ளார்ந்த பகுதிகளில் உள்ள அனைத்துக் காவல் நிலையங்கள், தொடர்புடைய துறைகளின் மாவட்ட அலுவலகங்கள் மற்றும் குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கிடையே இணைப்பை ஏற்படுத்தியதின் மூலமும், பங்களிப்பினருக்கும், பணியாளர்களுக்கும் காலமுறையிலான பயிற்சிகள் வழங்கப்பட்டதின் மூலமும் இது சாத்தியமாகியுள்ளது.

- காணாமல் போன குழந்தைகளின் பின்தொடர் முறைமையின் கீழ், தேசிய தகவல் தளத்தில் தகவல்களைப் பதிவு செய்வதற்கான மென்பொருள்களை உபயோகப்படுத்துதல் குறித்துப் பயிற்சி திட்டங்களை சமூகப் பாதுகாப்புத் துறை வகுத்துப் பயிற்சி வழங்கியுள்ளது.

- சமூகப் பாதுகாப்புத் துறை மற்றும் காவல் துறையில் பணியாற்றி வரும் 'தகவல் பதிவர்களுக்கு' சிறப்பானப் பயிற்சிகள் மூலம் இதுவரை, 1,781 இல்லங்களிலிருந்து, 1,08,066 குழந்தைகள் பற்றிய விவரங்கள் குழந்தைகளின் பின் தொடர் முறைமையின் கீழ் கணினி மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

- இத்தகைய சிறப்பான செயற்பாடுகளால், "குழந்தை பின்தொடர் முறைமையில்" குழந்தைகள் பற்றிய விவரங்களை பதிவேற்றம் செய்வதில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்டு, தேசிய அளவிலான கண்காணிப்பு அமைப்பில் ஓர் உறுப்பினராக தமிழ்நாடும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

15. **Describe the importance of ICDS.**
**ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுச் சேவைத் திட்டத்தின் (ICDS) முக்கியத்துவத்தை விளக்கவும்**

**ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் தொலைநோக்கு பார்வை:**

**மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் குறிக்கோள்கள்:**

1. ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு முழுமையான உடல், மன, அறிவு மற்றும் மன எழுச்சி வளர்ச்சி கிடைத்தல்

2. மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பு, குழந்தை நேயம், அதிக கவனத்துடன் சரியான ஆரம்ப கால பராமரிப்பு. வளர்ச்சி மற்றும் கற்றல்

3. ஆண் - பெண் சமநிலையை மேம்படுத்தும் குடும்பம், வளரிளம் பெண்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் திட்டங்களை செயல்படுத்துதல்

**குழும இயக்கத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்:**

- ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், 12-ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தின் (2012 – 2017) கீழ் செயல்திட்டம், மேலாண்மை மற்றும் நிறுவன சீரமைப்பு பணிகளைப் படிப்படியாக செயல்படுத்த மறுசீரமைக்கப்பட்டுள்ளது. இதன்படி, அங்கன்வாடி மையங்கள் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்துக் கல்வி அளிக்கும் முதல் நிலை இருப்பிடமாக இயங்கிட, "எழுச்சி மிகு முன் பருவ குழந்தை வளர்ச்சி மையமாக", மாற்றிட கூடுதல் மனிதவள ஆற்றலையும் அடிப்படை வசதிகளையும் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- மாநில திட்டக் குழும வழிகாட்டுக்குழு, மாநில அளவிலான அதிகார திட்டக்குழு மற்றும் மாநில ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட குழுமம் மாநில மற்றும் மாவட்ட குழந்தை வளர்ச்சித் திட்ட சங்கம் அவற்றின் ஆட்சிக் குழு மற்றும் செயற்குழு ஆகியவற்றை மாநில அரசு அமைத்துள்ளது.

- 2015 – 2015ஆம் ஆண்டு திட்ட செயலாக்க கருத்துருவில் (APIP) 05.02.2015-இல் நடைபெற்ற மாநில அதிகார திட்டக் குழுவின் கூட்டத்தில் 1471.80 கோடிக்கு ஒப்புதல் பெறப்பட்டு, மத்திய அரசிற்கு 09.02.2015 அன்று அனுப்பப்பட்டுள்ளது.

- 2015 – 2016 ஆம் ஆண்டு தமிழகத்தின் பங்களிப்பு மட்டும் 461.00 கோடியாகும். அதில் 80.00 கோடி இணை உணவுக்காகவும், 381.00 கோடி அங்கன்வாடிப் பணியாளர்களுக்கான ஊதியம், பிற பணப்பயன், தொகுப்பூதியம் மற்றும் சிறப்பு ஓய்வூதியம் ஆகியவற்றிற்காகவும் பயன்படுத்தப்படவுள்ளது.

சமூகநலம் மற்றும் சத்துணவுத்திட்டத் துறை

↓

மாநில ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (குழும இயக்குநர்) / குழந்தை வளர்ச்சி சங்கம்

↓

மாவட்ட திட்ட அலுவலகம் குழந்தை வளர்ச்சி சங்கம், 32 மாவட்டங்கள்

குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம் - 434 திட்டங்கள் (387 ஊரகம், 47 நகரம்)

↓

அங்கன்வாடி மையங்கள் 54,439

(முதன்மை மையங்கள் = 49,499 மற்றும் குறு மையங்கள் = 4,940)

**நோக்கங்கள் மற்றும் வழிமுறைகள்:**

- அனைத்து நிலைகளிலும் அத்தியாவசிய பணிகளை நெறிப்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை பலப்படுத்துதல்.

- ஊட்டச்சத்துக் குறைபாட்டைத் தடுத்தல், குழந்தைகள் வாழ்க்கையை நல்லமுறையில் துவங்க தேவையானவற்றை உறுதி செய்தல், மூன்று வயதிற்குட்பட்ட ஆரம்ப கால குழந்தைகளின் கவனிப்பு மற்றும் கற்கும் சூழ்நிலைக்கு சிறப்பு கவனம் அளித்தல் போன்றவற்றிற்காக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தைக் குழும இயக்கத்தின் கீழ் செயல்படுத்துதல்.

- அனைத்து நிலைகளிலும் செயல்திறனை அதிகரித்தல் திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் சாதனைகளை எய்த அனைத்து களப்பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு குழு செயல்பாட்டின் அடிப்படையில் பணிபுரிய பயிற்சிகள் அளித்தல்.

- துறைகளுக்கு இடையேயான சரியான ஒருங்கிணைப்பை அனைத்து நிலைகளிலும் உறுதி செய்தல்:

- தரமான நலப்பணிகள் மக்களைச் சென்றடைய சுகாதாரத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வசதி ஆகிய துறைகளுடனான ஒருங்கிணைப்பை அனைத்து நிலைகளிலும் உறுதி செய்தல் மற்றும பலப்படுத்துதல்.

**சமுதாய விழிப்புணர்வையும், பங்களிப்பையும் அனைத்து நிலைகளிலும் மேம்படுத்துதல்:**

- பயனாளிகள் மற்றும் பொது மக்களிடையே குழந்தை வளர்ச்சிக்காக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் அளிக்கப்படும் நான்கு வகை அடிப்படை குழந்தை வளர்ச்சிப் பணிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல். அதற்கான தன்னார்வ ஈடுபாட்டையும், சமுதாய ஆதரவையும் மேம்படுத்துதல்.

**குழந்தை வளர்ச்சிப் பணிகளுக்கான தகவல் தளம் மற்றும் அறிவு சார் தளத்தை அமைத்தல்:**

- ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட மேலாண்மை தகவல் அமைப்பை பலப்படுத்துதல். அடிப்படை தகவல் அமைப்புக்காக தகவல் தொடர்புக்கான தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துதல். தகவல்களைப் பரப்ப, பகிர்ந்து கொள்ள வசதிகளை ஏற்படுத்துதல், ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளுதல்.

**மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டக் குழுமத்தின் கீழ் வழங்கப்படும் நலப்பணிகள்:**

1. ஆரம்ப நிலை குழந்தைகள் கவனிப்பு, கல்வி மற்றும் வளர்ச்சி
   - இணை உணவு வழங்கல்
   - முன்பருவக் கல்வி அளித்தல்
2. ஊட்டச்சத்து ஆலோசனை மற்றும் கவனிப்பு
   - பச்சிளம் மற்றும் சிறு குழந்தைகளுக்கான உணவூட்டும் முறைகள்
   - மிதமான மற்றும் கடுமையான ஊட்டச்சத்து பற்றாக்குறையை சமுதாய அளவில் மேலாண்மை செய்தல்
3. சுகாதாரப் பணிகள்:
   - மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் தடுப்பூசி வழங்குதலை உறுதி செய்தல்
   - மருத்துவப் பரிந்துரை செய்தல்
4. சமுதாய பங்கேற்பு, விழிப்புணர்வு, ஆதரவு திரட்டுதல், தகவல், கல்வி மற்றும் தொடர்புப் பணிகள் அளித்தல்

**இணை உணவு:**

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் பயனாளிகளான 6 மாதம் முதல் 36 மாதம் வரையிலான குழந்தைகள், வளரிளம் பெண்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு, இணை உணவு (சத்துமாவாக) ஒரு வருடத்தில் 300 நாட்களுக்கு வழங்கப்படுகிறது. அங்கன்வாடி மையங்கள் வாயிலாக வழங்கப்படும் இணை உணவானது, குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் அன்றாடம் உட்கொள்ளும் உணவு மற்றும் பரிந்துரைக்கப்பட்ட உணவு இவற்றிற்கு இடையே ஏற்படும் புரதச் சத்து குறைப்பாட்டினை சரிசெய்ய ஏதுவாகவுள்ளது.

- ஊட்டச்சத்துக் குறைபாடுகளைக்களையும் பொருட்டு சிறப்பு முயற்சியாக திருவண்ணாமலை மற்றும் திருநெல்வேலி ஆகிய இரண்டு மாவட்டங்களில் 37 முதல் 60 மாதம் வரையுள்ள (இயல்பான, மிதமான மற்றும் கடுமையான எடை குறைவுடைய) அங்கன்வாடி மையக் குழந்தைகளுக்கு சிறுதானியங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட பிஸ்கட் அக்டோபர் 2014 முதல் 60,778 குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

- சிறுதானியங்களிலிருந்து பிஸ்கட், மிட்டாய் மற்றும் கேக்குகள் தயாரிக்கத் தேவையான இயந்திரங்கள், வாங்கி, அடுமனை அமைத்திட மதுரை மாவட்டம், S.W. 70. கள்ளிக்குடி, மகாத்மா காந்திஜி இணை உணவு தயாரிப்போர் மகளிர் மேம்பாட்டு தொழிற்கூட்டுறவு சங்கத்திற்கு ₹93.50 இலட்சம் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது.

**ஜப்பானிய மூளைக்காய்ச்சல் பாதிப்பு அதிகமான பகுதிகளில் உள்ள ஊட்டச்சத்து குறைவான குழந்தைகளுக்கு இணை உணவு வழங்குதல்:**

- ஜப்பானிய மூளைக்காய்ச்சல் ஒரு வைரஸ் தொற்று நோயாகும். ஊட்டச்சத்து குறைவான குழந்தைகளுக்கே மூளைக்காய்ச்சல்.'.கடுமையான மூளைக்காய்ச்சல் தாக்குதல் ஏற்படும். எனவே, மிகவும் அபாயகரமான பகுதிகளில் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்வது அவசியமாகிறது.

- தமிழக சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறை அமைச்சகம் மாநிலத்தில் கரூர், மதுரை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 5 மாவட்டங்களை மிகவும் கவனம் தேவைப்படும் மாவட்டங்களாக கண்டறிந்துள்ளது. அம்மாவட்டங்களில் உள்ள 6 முதல் 36 மாதமுடைய மிதமான மற்றும் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைக்கு ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்த ஒரு குழந்தைக்கு கூடுதல் இணை உணவு நாளொன்றுக்கு 4.00 செலவினத்தில் ஆண்டுக்கு 300 நாட்கள் வழங்கப்பட்டு வருவதால், அம்மாவட்டங்களிலுள்ள 37 முதல் 60 + மாத குழந்தைகளுக்கு இணை உணவு வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2014 – 2015 ஆம் ஆண்டு 5 மாவட்டங்களிலுள்ள 53,067 பயனாளிகள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெற்றுள்ளார்கள்.

**ஆரம்ப நிலை குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி:**

- இத்திட்டத்தின் கீழ், அங்கன்வாடி மையம் எழுச்சி மிகு குழந்தைகள் மையமாக மாற்றப்பட்டு இனிமையான கற்றல் சூழலைத் தரக்கூடிய குழந்தை நேய மையமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆரம்ப நிலை குழந்தைகளுக்கு பராமரிப்பு மற்றும் கல்வி அளித்தல், குழந்தைகளின் முழு வளர்ச்சிக்கான கவனிப்பு, ஆரம்பகால தூண்டுதல் செயல்பாடுகள் / உரையாடுதல் போன்றவற்றை 3 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும், 3 – 6 வயது குழந்தைகளின் வளர்ச்சிக்கான முன்பருவக் கல்வியும், 5 – 6 வயது குழந்தைகளை பள்ளிக்குச் செல்ல ஆயத்தப்படும் வகையில் முன்பருவக் கல்வியும், திட்டமிட்டு அர்ப்பணிப்புடன் 4 மணி நேரத்திற்கு அளிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

**அங்கன்வாடி குழந்தைகளைப் பள்ளிக்கு செல்ல ஆயத்தப்படுத்தும் திட்டம்**

- தற்போதைய காலச் சூழ்நிலையில் பெற்றோர்களிடையே நிலவி வரும் ஆங்கில வழிக் கல்வி மோகத்தைப் போக்கும் பொருட்டு முன்னோடித் திட்டமாக 2,873 மையங்களில் பயன் பெற்று வரும் 73,844 குழந்தைகள் பயனடையும் வகையில் , சென்னை, திருச்சிராப்பள்ளி,திருநெல்வேலி , விழுப்புரம், பெரம்பலூர், ஆகிய 5 மாவட்டங்களில் ₹93.57 இலட்சம் செலவில் 2014-2015 ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**சுகாதாரப் பணிகள்:**

**எடையைக் கண்காணித்தல்**

- ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ், 0-5 வயதுடைய குழந்தைகளின் எடை கண்காணிக்கப்படுகிறது. மாதந்தோறும் இக்குழந்தைகள் எடை எடுக்கப்படுகின்றனர். கண்டறியப்பட்ட எடை, உலக சுகாதாரப் நிறுவனம் நிர்ணயித்த பதிவேடுகிளலும் மற்றும் தாய் சேய் பாதுகாப்பு அட்டைகளிலும் பதிவு செய்யப்படுகிறது. குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையானது பதிவேடுகளில் உள்ள வளர்ச்சிக் குறிப்பில் இருந்து அறியப்பட்டு ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## GENDER BUDGETING

### What is Gender Budgeting (GB)?

- GB is concerned with gender sensitive formulation of legislation, programmes and schemes; allocation of resources; implementation and execution; audit and impact assessment of programmes and schemes; and follow-up corrective action to address gender disparities.
- A powerful tool for achieving gender mainstreaming so as to ensure that benefits of development reach women as much as men.
- Does not seek to create a separate budget but seeks affirmative action to address specific needs of women.
- Monitors expenditure and public service delivery from a gender perspective.
- Entails dissection of the Government budgets to establish its gender differential impacts and to ensure that gender commitments are translated in to budgetary commitments.

### Gender Budgeting in India

- Gender Budget Statement (GBS) was first introduced in the Indian Budget in 2005-06. This GB Statement comprises two parts–
  - Part A reflects Women Specific Schemes, i.e. those which have 100% allocation for women.
  - Part B reflects Pro Women Schemes, i.e. those where at least 30% of the allocation is for women.
- India's gender budgeting efforts stand out globally because they have not only influenced expenditure but also revenue policies (like differential rates for men and women in property tax rates and reconsideration of income tax structure) and have extended to state government levels.
- Gender budgeting efforts in India have encompassed four sequential phases: (i) knowledge building and networking, (ii) institutionalizing the process, (iii) capacity building, and (iv) enhancing accountability.
- Gender budgeting in India is not confined to an accounting exercise. The gender budgeting framework has helped the gender-neutral ministries to design new programs for women.
- **Gender Budgeting Cells (GBC)** as an institutional mechanism have been mandated to be set up in all Ministries/Departments.
- GBCs conduct gender based impact analysis, beneficiary needs assessment and beneficiary incidence analysis to identify scope for re-prioritization of public expenditure and improve implementation etc.

## மனித வளர்ச்சி குறியீடு

- முதல் மனித மேம்பாட்டு அறிக்கையானது **1990-ம் ஆண்டு UNDP** நிறுவனத்தால் பாகிஸ்தானின் **முகஹூப்-உத்-ஹக்** என்ற பொருளியலறிஞரின் வழிகாட்டுதலின்படி வெளியிடப்பட்டது.
- மனித வளர்ச்சி குறியீடு என்ற பதத்தை வெளியிட்டவர் **மெஹபூப் உல்.ஃப்ஹக் (பாகிஸ்தான்)**
- ஒவ்வொரு ஆண்டும்-வெளியிடுபவர்கள் **UNDP (United Nation Development Programme)**
- **1977ம்** ஆண்டில் மனிதவள மேம்பாட்டு குறியீடு மனித ஏழ்மைக் குறியீட்டை அறிமுகப்படுத்தியது
- மனித மேம்பாட்டு குறியீட்டின்படி, வெவ்வேறு இந்திய மாநிலங்களுக்கு **1997**ஆம் ஆண்டில் **UNFPA** நிறுவத்தால் மனித மேம்பாட்டு குறியீடு கணக்கிடப்பட்டுள்ளது
- **UNFPA** நிறவனத்தால் இந்திய திட்டக்குழு நாட்டின் மனித மேம்பாட்டு அறிக்கையை **2001ல்** கொண்டு வந்தது.
- **HDI** கணக்கீடுவதற்கு நாட்டு மக்களின் எழுத்தறிவு விகிதம், சராசரி ஆயுட்காலம், பிறப்பு விகிதம், இறப்பு விகிதம், தலா வருமானம் போன்றவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

## கருப்பு பணம் (Black Money)

- **கறுப்பு பணம்** (Black Money)
  - கருப்புப் பணம் என்பது அரசாங்கத்திற்கு செலுத்தக் கடடைப்பட்ட வரிகளை செலுத்தாமல் தனி நபர்களோ, நிறுவனங்களோ, தான் ஈட்டிய பணத்தை உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலேயோ பதுக்கி வைத்திருப்பதாகும். கருப்புப் பணம் என்பது முறைகேடான வழியில் சேர்த்த கணக்கில் வராத அசையும் மற்றும் அசையா சொத்துக்களையும் குறிக்கும். இந்த கருப்புப் பணமானது பெரும்பாலும் ஊழல், முறைக்கேடான பணப்பரிமாற்றம், முறைக்கேடான வியாபாரம், பங்கு வணிகம் மூலமே கிடைப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.
  - வெளிநாடுகளின் கருப்புப் பணத்தை தங்கள் நாட்டில் பதுக்கி வைப்பதற்கு ஸ்விஸ் போன்ற சில நாடுகளின் பொருளாதாரக் கொள்கைகளும் சட்டங்களும் இடம் தருகின்றன. இந்த நாட்டில் வங்கிகள் தங்களின் வாடிக்கையாளர் விவரங்களைத் தர சட்டம் அனுமதிப்பதில்லை.
  - உலகின் 10 சதவீத செல்வம் கருப்புப் பணமாக உள்ளதாக பொருளாதார அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

- **விளக்கம்:-** (The Concept)
  - கறுப்பு பணம் என்பது வரி-விலக்கப்பட்ட வருமானமாகும். சட்ட-ரீதிகள் மற்றும் சட்டத்திற்கு எதிரான இரண்டு வழிகளிலும் இதனை சம்பாதிக்கலாம். வருமானங்களை பெறுபவர்கள், வரி கட்ட வேண்டும் என்ற காரணங்களுக்காக, தனது வருமானத்தை முற்றிலுமாக கூறாமல் மறைத்தலே இதற்கு முக்கிய மூலமானமாகும். அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள் தனியார் மருத்துவமனை வைத்து சம்பாதித்தல், டியூசன் வைத்து ஆசிரியர்கள் சம்பாதித்தல், தேர்வுகள் மற்றும் புத்தகங்கள் வெளியீட்டு பராமரித்தல், கணக்குப் புத்தகத்தில் குறிப்பிட்ட விலைக்கு அதிகமாக வக்கீல்கள் பணம் சம்பாதித்தல், போன்றவை வருமானத்திற்கு அதிகாமான வழியில் பணங்களை சேர்த்து மறைத்து வைத்தலுக்கு எடுத்துக்காட்டுகளாகும். இலஞ்சம் பெறுதல், சட்ட விரோத செயல்களில் ஈடுபடுதல், கறுப்பு-சந்தைகளில் சம்பாதித்தல், கட்டுப்பாடு விதிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக பொருட்களை விற்பனை செய்தல், கணக்கு புத்தகங்களில் குறிப்பிடப்பட்ட விலைக்கு அதிகமாக வீடுகளை விற்பனை செய்தல் போன்றவை சட்டத்திற்கு எதிரான வழியில் சம்பாதிக்கும் வழிமுறையகளாகும்.

  - கறுப்பு பணத்தினை, வெள்ளை பணமாக மாற்ற இயலும். அதே போல் வெள்ளை பணத்தை, கறுப்பு பணமாகவும் மாற்றிவிடலாம். ஒருவன், ஒரு பொருளை பெற்றதற்கான விற்பனை-வரியை கடைக்காரருக்கு அளித்து, விலை பட்டியலை பெற்றுக் கொண்டு, உண்மையிலேயே அப்பொருட்களை வாங்காவிட்டால், அவர் அங்கு கறுப்பு பணத்தினை உருவாக்குகின்றார். இது போன்ற வழக்குகளில் உண்மையில் செலுத்தப்படாத பணம் கறுப்பு பணமாக மாறுகிறது. இது போன்ற சர்ச்சைகளில், அக்கடைக்காரர் அதே பொருட்களை மற்றொருவரிடம் விலை பட்டியலை

கொடுக்காமல் விற்றுவிடுகிறார். மற்றொரு வகையில், ஒருவர் சில பொருட்களை வாங்குகையில் (இருசக்கர வாகனம் அல்லது VCR போன்றவை) 15,000 ரூபாய் கொடுத்து 10,000 ரூபாய் மதிப்புள்ள விலைப்பட்டியலை மட்டுமே பெறுகையில் மீதம் உள்ள 5000 ரூபாய் விற்பனையாளருக்கு கறுப்பு பணமாய் மாறிவிடுகிறது. இவ்வழக்கில் வெள்ளப்பணம் கறுப்பு பணமாக மாறுகிறது.

❖ **கருப்புப்பணம் காணப்படும் அளவு:-** (Magnitude of Prevalence)

- உலகமெங்கும் பரவியுள்ள நிகழ்வாக கருப்புப்பணம் இருப்பினும், பல்வேறு வழிமுறைகளை கொண்டு ஒரு சமுதாயத்தின் மொத்த கறுப்பு பணத்தின் அளவை கணக்கிட இயலாது. முன்னேறி வரும் நாடுகளில் மட்டுமல்லாது. அமெரிக்கா, இரஷ்யா, ஜப்பான், கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, ஐக்கிய நாடுகள் போன்ற முன்னேற்றமடைந்த நாடுகளிலும் கறுப்பு பணம் புழக்கத்தில் இருந்து வருகிறது.

120 கோடி மக்கள்தொகை கொண்ட நாட்டில் வெறும் 5 சதவிகிதத்திற்கும் குறைவானவர்களே வருமான வரி செலுத்துகின்றனர். சில தனிப்பட்டவர்கள் தங்களது உண்மையான வருவாய் விவரங்களை வெளியிடாமல் இருப்பதால், நேர்மையாக வரி செலுத்துபவர்கள் கடுமையான வரிச்சுமையை எதிர்கொள்ளும் நிலை உள்ளது. பொருளாதாரத்தில் நிலவும் கருப்பு பணத்தின் மதிப்பைத் துல்லியமாக கணக்கிட முடியாது என்ற போதிலும், இது 2 டிரில்லியன் டாலர் மதிப்பிலான இந்தியப் பொருளாதாரத்தில் 20 முதல் 70 சதவிகிதமாக இருக்கும் என்று சில மதிப்பீடுகள் மற்றும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. 2010ம் ஆண்டு இறுதி வரையில் 9500 கோடி ரூபாய் அளவுக்கு சுவிஸ் வங்கிகளில் இந்தியர்கள் முதலீடு செய்திருப்பதாக சுவிட்சர்லாந்து அரசு கூறியுள்ளது. 8 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள நேரடி வரி வருவாயில் சுமார் 60 சதவிகிதம் நிறுவனங்களிடம் இருந்தும் எஞ்சிய 40 சதவிகிதம் தனி நபர்களிடமிருந்தும் வசூலிக்கப்படுகிறது. நமது வரி அடித்தளத்தை விரிவுபடுத்துவதற்கு உள்ள வாய்ப்புகளை இது எடுத்துக்காட்டுகிறது. நமது நாட்டில் மொத்தம் உள்ள 25 கோடி நிரந்தர கணக்கு எண் வைத்திருப்பவர்களில் 5.43 கோடி பேர் மட்டுமே வரி செலுத்துவோராக உள்ளனர்.

**கருப்புப்பணம் உருவாதற்கான காரணங்கள்:- (Causes of Generating Black Money)**

1. **போலியான வரிச்சட்டங்கள் மற்றும் வரி மோசடிகள்:-** (Unrealistic Tax Laws and Tax Frauds)

வரி மற்றும் பணிகளின் அதிகரிப்பு, மக்களை அதிலிருந்து விலகி, பின் வாங்கச் செய்துள்ளது. வரி செலுத்துவதிலிருந்து தப்பித்து, வரி செலுத்தாமல் இருக்கும் கம்பெனிகள் மற்றும் நிறுவனங்களின் மொத்த தொகை கிட்டதட்ட ஒரு வருடத்திற்கு 400 கோடி ரூபாயாகும் என்று அஞ்சப்படுகிறது. வருமான வரிகள் குறைக்கப்பட்டால், மறைந்து வைக்கும் தொகை குறைக்கப்பட்டு, வசூலாகும் தொகை அதிகரிக்கும். 1993-94 ஆம் ஆண்டுகளில் உயர்ந்த அளவிலான வருமான வரி 40% வரை உயர்த்தப்பட்ட போது இவ்வுண்மை உணரப்பட்டது. இதைத் தவிர, கடைக்காரர்கள் மற்றும் பிற சுய தொழில் ஈடுபடும் நபர்களுக்காக தானிப்பட்ட வரியை விதித்து போது, அவர்களாகவே முன் வந்து வரியை செலுத்தினர்.

2. **உள்நாட்டு உற்பத்தி பொருட்கள் மீதான வித்தியாசமான வரி விதிப்புகள்:-** (Different Rates of Excise Duty)
   - ஒரே மாதிரியான பொருட்களுக்கு கூட வித்தியாசமான வரிதொகைகள் விதிக்கப்பட்டது. எடுத்துக்காட்டாக, துணி ரகங்கள் மற்றும் சிகரெட்டுகள் விற்பனைக்கு ஏற்றவாறு வரி விதிக்கப்பட்டது. பல்வேறு விதமான துணி ரகங்களுக்கு ஏற்றவாறு வரிகள் விதிக்கப்பட்டன. இதனால் தொடர்ச்சியாக குறைந்த அளவிலான வரிகள் செலுத்துவதற்காக வியாபாரிகள் ஒரே மாதிரியான, கீழ்மட்ட துணிகளை வாங்குகின்றனர். இதனாலேயே ஒரு வருடத்திற்கு 1000 கோடி ரூபாய் கறுப்பு பணம் உருவாக்கப்படுகிறது. மொத்த வியாபாரத் துறைக்கான வருமான வரி மற்றும் விற்பனை வரியால், ஒரு வருடத்திற்கு 50,000 கோடி ரூபாய் வரை கறுப்பு பணம் சேர்கிறது.

❖ **தடுக்கும் கொள்கைகள்:-** (Control Policy)

- கறுப்பு பணம் உருவாவதற்கு மற்றொரு காரணம், அரசின் விலை-கட்டுப்பாடு கொள்கையாகும். கட்டுப்படுத்தும் பொருட்களை தேர்ந்தெடுப்பது, அவற்றின் விலையை நிர்ணயிப்பது போன்ற செயல்களில் ஈடுபடுகையில் அப்பொருட்களின் நிலை மற்றும் தேவையைப் பற்றிய கருத்தினை அரசு சிந்திப்பதில்லை.

❖ **பங்குத் திட்டம்:-** (Quota System)

- பங்குத் திட்டம், கறுப்பு பணம் உருவாவதற்கு மற்றொரு காரணமாகும், ஏற்றுமதி பங்கு, இறக்குமதி பங்கு மற்றும் அந்நிய மாற்று கொள்கை போன்றவை பொதுவாக தவறான வழியில் பயன்படுத்தப்படுகிறது. ஒரு நாட்டின் நம்பமுடியாத விலை கட்டுப்பாடுகள், அதன் நிறுவனங்களை வரி சட்டத்தை அத்துமீறுமாறு ஊக்குவிப்பது போல் ஆகும்.

❖ **குடியரசுத் திட்டம் மற்றும் அரசியல் நதியுடனான தேர்தல்கள்:-**
(Election in a Democratic System & Political Funding)

- ஒரு வேட்பாளருக்கு சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பணம் கட்டுப்படுத்தபட்டுள்ளதால், தேர்தல் நிதிகளுக்காக அரசியல் கட்சிகளுக்கு தனது லாபத்தின் பாதி பங்கில் 5% அளிக்குமாறு நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். பெறும்பாலான தேர்தலுக்கு, கறுப்பு பணமே நிதியாக அளிக்கப்படுகிறது. இது போன்ற வியாபார பெருமக்கள் அரசியல் ஆதரவினையும் பெற்றுக்கொண்டு, பொருளாதாரத்திலும் தள்ளுபடி பெற்றுக்கொள்கின்றனர். இது போன்ற செய்கைகள் கறுப்பு பணத்தை உருவாக்குகின்றது.

❖ **பண்ணை விவகாரங்கள்:-** (Real Estate Transactions)

- பண்ணை விவகாரங்கள், கறுப்பு பணம் உருவாவதற்கு முக்கிய காரணமாக கருதப்படுகிறது. இந்நாட்களில் வீடு/நிலம் வாங்குவது இலாபகரமானதாக கருதப்படுகிறது. கிராமப்புற விவசாய நிலங்கள், நகர்ப்புறங்களில் உள்ள அதிகப்படியான கட்டிடங்களாலி, நகர வீடுகளாக மாறி வரும் நிலை தற்போது அதிகரித்துள்ளது. விவசாய நிலங்களில் அங்கீகரிக்கப்படாத கட்டிடங்களை கட்டுவது, சட்டத்திற்கு எதிரான செயலாகும். இவ்வாறு நிலம் விற்பனை/வாங்குதலில் ஈடுபடுவோர் தங்கள் பதிவுத்தாள்களில் காண்பிக்கும் தொகை, சந்தையிலிருந்கும் விலையை விட குறைந்தே காணப்படும். இதனால் நிலம் விற்பவர் பெருமளவில் வரி செலுத்தாமல் இலாபமடைகிறார். சட்டத்திற்கு எதிராக நிலங்களை விற்கும் விவகாரத்தில் ஒரு வருடத்திற்கு 2000 கோடி வரை கறுப்பு பணம் உருவாவதாக கூறப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் இதுபோன்ற நிலங்களை விற்கும் 50 இலட்சம் விவகாங்கள் நடைபெறுகிறது.

- பல்வேறு மாநிலங்களில் 14.5% மற்றும் 28% இடையேயான உயர்தர விலைக்கான வேலைகள் செய்யப்படும்போது சொத்துக்கள் பதுக்கப்படுதல் மற்றும் அறிக்கையிடாத ஒப்பந்தம் போன்றவை உருவாகிவிடுகின்றன. இது போன்ற பணிகள் 2- 3% குறைக்கப்பட்டால் ஏமாற்றுதல் தடுக்கப்படும் நிலம் உச்சவரம்பு சட்டத்தினால் (Urban Land Cailing Acts) நிலங்கள் விற்பனை குறைக்கப்பட்டு, கறுப்பு சந்தை, உருவாக்கப்பட்டது. பண்ணை விவகார வழியில் ஆண்டிற்கு 13,000 கோடி வரை கறுப்பு பணம் உருவாக்கப்படுகிறது.

❖ **தனியார் மயமாக்குதல்:-** (Privatiozation)

- மந்திரிகள் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு வழி வகுக்கும் வகையில் தனியார்மயமாக்குதல் என்னும் புதிய பிரிவு ஏற்படுத்தப்பட்டு கறுப்பு பணம் உருவாவதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது.

- தனியார் மயமாக்குதலில் சேர்க்கப்பட்ட கறுப்பு பணம் வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்டால் பல ஊழல்கள் வெளிச்சத்திற்கு கொண்டு வரப்படும்.

❖ **விவசாய வருமானம்:-** (Agricultural Income)

- விவசாய வருமானத்திற்கான வருமான வரியை செலுத்த விருப்பமின்மை கூட கறுப்பு பணத்தை உருவாக்கியுள்ளது. விவசாய துறையில், பெரும் தொழில் வீடுகள் கூட கடந்த 10 ஆண்டுகளில் நுழைந்துள்ளது. பெரிய விளை நிலங்களை கொண்டு வளர்ச்சியடைந்தாலும் பொருட்கள் எதுவும் ஈட்டப்படுவதில்லை, மற்ற வழிகளில் சம்பாதிக்கப்படும் கறுப்பு பணம் கூட, விவசாய வருவாய் கணக்கில் காண்பிக்கப்பட்டு வெள்ளை பணமாக மாற்றப்படுகிறது. விவசாய வருவாய்க்கும் வரி விதிப்பது இது போன்ற நடவடிக்கைகளை தடுக்கும்.

❖ **சமுக விளைவுகள்:-** (Social Effects)

- பொருளாதார விளைவுகளை தவிர பல சமுதாய பலன்களும் கறுப்பு பணம் உருவாக காரணமாகிறது. பொருளாதார சொற்களில் கூற வேண்டுமானால் கறுப்பு பணமானது பொருளாதார சீர்கேட்டினை உருவாக்கி, பொருளாதார முன்னேற்ற திட்டங்களை தடுத்துவிடுகிறது. சமூக ஒற்றுமையை நிலைகுலையச் செய்து, நேர்மையான மக்களிடையே வெறுப்புகளை உருவாக்கி, கடத்தல், இலஞ்சம் வாங்குதல் போன்ற குற்றங்களை அதிகரிக்கச் செய்கிறது. மேலும் சமுதாயத்தின் ஏழை மக்கள் மற்றும் பலவீனமான பிரிவினரை உயர்த்துவதற்கான சேவை திட்டங்களை பெரிதும் பாதிக்கிறது. விலைகளின் வளர்ச்சி, புழக்க மிகுதி, வேலையின்மை, ஏழ்மை போன்ற உண்மை வளர்ச்சிகள் அதிக அளவில் வளர்ந்து உண்மையாக அரசு கொள்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

## தடுப்பு திட்டங்கள்:- (Measures of Control)

- கடந்த 50 ஆண்டுகளில், கறுப்பு பணத்தை கட்டுக்குள் கொண்டு வர அரசு பல்வேறு திட்டங்களை அறிவித்தது. அவற்றுள் சில:- சிறப்பு பங்கு ஒப்பந்தங்களை உருவாக்குவது, உயர்ந்த ரூபாய் நோட்டுகளை பிரித்தல், கட்டாயமான சோதனைகள், தன்னிச்சையான நடவடிக்கைகள் போன்றவை.

- சில பகுதிகளில் விதிக்கப்பட்ட வரியினை குறைத்தல், வருவாய்க்கு ஏற்றவாறு தன்னிச்சையான வரி செலுத்துவதற்கு தூண்டுதல், பொருளாதார நிபுணர் குழுவிடம் அறிவுரை கேட்பது, பல்வேறு நிலைகளில் ஊழலை தடுப்பது, வீடு கட்டுதலுக்கான வரி விலக்கு அளித்தல், பல்வேறு கட்டுபாடு கொள்கைகளை மேற்கொள்ளுதல், போன்றவை கறுப்பு பணப்பிரச்சனையை போக்கும் என்று சொல்லப்படுகிறது. தனிப்பட்ட முயற்சிகளால் எந்தவொரு இலாபத்தையும் அடைய முடியாது. ஆனால் ஒற்றுமையான, பலமுள்ள திட்டங்கள், நல்ல அரசியல் நோக்குடையவர்களுடன் இணைந்தால் பெருமளவில் வெற்றி பெறுவது நிச்சயமான ஒன்றாகும்.

2015ல் வரி ஏய்ப்பின் மூலம் கணக்கில் வராத வெளிநாட்டுச் சொத்தை முடக்க அரசிற்கு அதிகாரம் வழங்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. நீதியரசர் எம்.பி.ஷா தலைமையிலான சிறப்புப் புலனாய்வுக் குழு மூலம் வெளிநாட்டுக் கருப்புப் பணம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

பனாமா தாள் வெளியீட்டை விசாரிக்க வல்லுநர் குழு அமைக்கப்பட்டது. இரட்டை வரித்தவிர்ப்பு ஒப்பந்தங்கள் வரித்தகவல் பரிமாற்ற ஒப்பந்தங்கள் மூலம் பிற நாடுகளுடனான பரஸ்பரத் தகவல் பரிமாற்றம் செய்து கொள்ள வழி ஏற்பட்டுள்ளது.

தானியங்கு தகவல் பரிமாற்றம் சார்ந்தும் அமெரிக்க அந்நிய வரி ஒப்புதல் சட்டத்தின் மூலமாகவும் பன்னாட்டு வி ஏய்ப்புக்களை கண்டறிந்து சமாளிப்பது. பழைய பணச்சலவைச் சட்டம், 2002 ஐ திருத்தி குற்றவாளிகளின் சொத்துக்களை முடக்கித் தண்டிப்பது. பினாமி பரிமாற்றச் (தடுப்பு) சட்டம், 1988ஐ திருத்தி பினாமி பரிமாற்ற (தடுப்புச்) சட்டம், 2010ஐ அமலாக்குவது. வருமான வரித்துறையின் தகவல் தொழில்நுட்பத் திட்டமான 'ப்ராஜக்ட் இன்சைட்டினை' முன்னெடுத்தல். பினாமி பரிமாற்றச் (தடுப்புச்) சட்டம், 2016. இது 2016ல் கொண்டுவரப்பட்ட இச்சட்டம் பினாமி பரிமாற்றச் (தடுப்பு) சட்டத்தின் (1988) திருத்த வடிவமாகும். இது பினாமியின் பேரில் சொத்துக்களைக் குவிப்பதைத் தடைசெய்கிறது.

❖ **வருமான அறிவிப்புத் திட்டங்கள்**

- ➢ பொதுவாகக் கருப்புப் பணத்தை அரசிடம் அறிவித்து தமது வருமானத்தை குறிப்பிட்ட வரி கட்டுவதன் மூலம் சலவை செய்து கொள்ள அரசால் இத்தகைய சிறப்புத் திட்டங்கள் வெளியிடப்படுகின்றன.
- ➢ இதன்படி 1951-1997 ஆம் ஆண்டு வரை 10 கருணைத் திட்டங்களை மத்திய அரசு கொண்டுவந்தது. 1997ல் VDIS என்ற தானாக வருமானத்தை அறிவித்தல் திட்டம் கொண்டுவரப்பட்டது.

❖ **தாமாக வருமானத்தை அறிவிக்கும் திட்டம்:**

- ➢ இத்திட்டம் ஜூன் 1, 2016 இல் நடைமுறைக்கு வந்தது. ஜூன் 1 முதல் செப்டம்பர் 30 வரை நான்கு மாத கால இடைவெளியில் செயல்படுத்தப்பட்டது.

**சிறப்பம்சங்கள்**

- ➢ இத்திட்டத்தின் கீழ் வருமானத்தை அறிவிப்பவரின் தகவல்கள் இரகசியமாக வைக்கப்படும். அறிவிக்கப்படும் தொகையின் மீதான மொத்த வரி 45% (சாதாரணமாகப் பெருநிறுவன வரி 30%) ஆகும்.
- ➢ அறிவிக்கப்படும் தொகையின் மீதான வரி (30%) உடன் "கிருஷி கல்யான் வரிமேல் வரி" (செஸ்) 25%, செலுத்துகின்ற வரி மீது தண்டத்தொகை 25% ஆக (30% + 7.5% + 7.5% = 45%) 45% மொத்த வரி ஆகும். இதன்மேல் அறிவிக்கப்படும் தொகைக்கு வசதி வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.
- ➢ இத்திட்டத்திற்காக சொத்தின் மதிப்பு ஜூன் 1 2016, அன்றைய தினத்தின் மதிப்பு கணக்கீடுகளில் பயன்படுத்தப்படும். கிருஷி கல்யாண் வரிமேல்வரியானது (செஸ்) வரியிடத்தக்க அனைத்து சேவைகளின் மீது விதிக்கப்படுகிறது. இவ்வரிமேல்வரி மற்ற சேவைவரிகளின் மீது 0.5% வசூலிக்கப்படுகிறது. இவ்வரிமேல்வரி விவசாய மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதியளிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இந்தத்திட்டத்தின் மூலம் Rs.65250 கோடி ரூபாய் வெளிப்பட்டு உரிய வரித்தொகை கட்டப்பட்டது.

❖ **பிரதான் மந்திரி கரீப் கல்யாண் திட்டம்**

- பணவிலக்கலின் மூலம் கருப்புப் பணப் பதுக்கல்காரர்கள் தம்மிடம் உள்ள தொகைக்கு உரிமை கொண்டாட முடியாமலும், வங்கியில் செலுத்தி மாற்றிக் கொள்ள இயலாமலும் சிக்கியுள்ளனர். இது கருப்புப் பணந்தானேயன்றி கள்ளப் பணமல்ல. எனவே மத்திய அரசு இந்தத் திட்டத்தை அறிவித்துள்ளது.

**சிறப்பம்சம்**

- அறிவிக்கும் தொகையில் 50ரூ வரி
- அறிவிக்கும் தொகையில் 25ரூ இத்திட்டக் கணக்கில் வட்டியின்றி நான்காண்டுகளுக்கு வரவாக்கி முடக்கப்படும்.
- மீதி 25ரூ தொகை அறிவிப்பவருக்கே கிடைக்கும்.
- இந்த வைப்புத் தொகை ஊரக மேம்பாட்டுக்குப் பயன்படுத்தப்படும்.

**பணவிலக்கலின் நன்மைகள்**

- பணவிலக்கலின் மூலம் கணக்கில் வராத கருப்புப் பணம் அரசுக்கு முழுவதும் கிடைக்கும். இத்தொகை நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படும்.
- தீவிரவாதிகளின் கைகளில் புழங்கிய கருப்புப்பணம் செயலிழக்கும். எனவே நாட்டின் பாதுகாப்பு மேம்படும்.
- 86மூ தொகை வங்கி வழியே வந்து செல்வதால் கருப்புப் பணம், நிழற்பொருளாதாரத்தின் கைகள் கட்டப்படும். இது ஊழலைக் குறைத்து வெளிப்படைத்தன்மை, அரசுச் செயல்திறனை அதிகரிக்கும். தற்போது சர்வதேச ஊழல் குறியீட்டின் 76வது இடத்திலுள்ள இந்தியா வருங்காலத்தில் நல்ல நிலையை அடையும்.
- குறுகிய காலச்சிக்கல்களைத்தாண்டி நீண்ட கால நோக்கில் நமது பேரியல் பொருளாதாரம் வலிமை பெற இது ஒரு பெரிய அடித்தளமாகும்.

**ரொக்கமில்லாப் பொருளாதாரம்**

- அரசு பணவிலக்கலக்குப் பிந்தைய நாட்களில் கருப்புப் பணம் மீண்டும் உருவாகி சுழல் வதை தடுக்க ரொக்கமில்லா மின்னியப் பொருளாதாரத்திற்கு நாட்டினை முடுக்கிவிட்டுள்ளது. மின்னியப் பரிவர்த்தனைக்கான புதிய முன்னெடுப்புக்கள்.
- ஜன்தன் வங்கிக் கணக்குகளைப் பெருவாரியாகப் பயன்படுத்துதல்.
- வங்கி வழிப் பரிவர்த்தனைகள்
- இணையப் பரிவர்த்னைகள்
- ஒன்றிய செலுத்துகை ஊடாடி வாயிலாகப் புதிய செல்பேசிச் செயலிகள்
- மின்-பணப்பை
- இந்த மின்னியப் பரிவர்த்தனைக்காக அரசு இரண்டு ஊக்குவிப்புப் பரிசுத்திட்டங்களை அறிவித்துள்ளது.
- லக்கி கிரக திட்டம் – மின்மயப் பரிவர்த்தனை மேற்கொள்ளும் வாடிக்கையாளருக்கான பரிசு.
- டிஜிதன் வியாபாரி திட்டம் – வியாபாரிகளுக்கான பரிசு.

## முன்னெடுத்துச் செல்வோம்

உலகின் அனைத்து பெரிய பொருளாதாரங்களும் கருப்பு பணத்தை ஒழிக்க ஒன்றுபட்டு, பல்வேறு உடன்படிக்கைகளை செய்துகொண்டுள்ள நிலை இனி வரி ஏய்ப்பு என்பது மிகவும் கடினமானதாகவே இருக்கும். தகவல் பரிவர்த்தனைக்காக நாடுகள் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள நிலையில் வரி ஏய்ப்போரைக் கண்டுபிடிக்க வரித்துறை அதிகாரிகளுக்கு வசதியை அளித்துள்ளது. இதே போல் இந்திய அரசும் மறைத்து வைக்கப்பட்டுள்ள கறுப்புப் பணத்தை வெளிக்கொண்டு வர தனது முயற்சிகளை தீவிரப்படுத்தியுள்ளது. தொழில்நுட்பத்தின் உதவியுடன் இந்த முயற்சிகள் மேலும் விரிவடையும். தொழில்நுட்பத்தை சரியான முறையில் பயன்படுத்தும் போது நமது முயற்சிகள் ரொக்க பரிவர்த்தனைகளை கைவிட்டு அட்டைகள் மூலம் பரிவர்த்தனை செய்வது ஊக்குவிக்கப்பட வேண்டும். கறுப்பு பண சுழற்சியை அழிப்பதற்கு இதுவே முக்கியமாக இருக்கும்.